அனுப்புநர்
திரு.பா.பொன்னையா.இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
காஞ்சிபுரம்

D.E
D.A
S.D.O
SUPDT.

பெறுநர்

1. அரசு செயலர்
வருவாய்த்துறை
தலைமை செயலகம்
சென்னை - 9

2. கூடுதல் தலைமை செயலர் மற்றும்
நில நிர்வாக ஆணையர்
நில நிர்வாகத்துறை
சேப்பாக்கம், சென்னை - 05

........ உரிய வழிமுறையாக

16 MAR 2018

ந.க.18478/2014/ஆ2 நாள். 08.03.2018

அய்யா,

பொருள் : நிலமாற்றம் - காஞ்சிபுரம் மாவட்டம் - மகாபலிபுரம் முதல் சென்னை துறைமுகம் (வழி) திருப்போரூர் - சிங்க பெருமாள் கோயில் - திருப்பெரும்புதூர் - திருவள்ளூர் .- தாமரைப்பாக்கம் - பெரியபாளையம் - புதுவாயில் மறறும் காட்டுபள்ளி பணிக்கு சாலை அமைக்க வனத்துறை இடத்திற்கு பதிலாக வனத்துறைக்கு மாற்று நிலமாக மதுராந்தகம் வட்டம் - நல்லாமூர் கிராம புல எண் 99/1 ல் 20.46.0 எக்டேர் நிலத்தினை நிலமாற்றம் செய்து நிலமாற்ற அறிக்கை - அனுப்புதல் தொடர்பாக.

பார்வை
1.கோட்டப்பொறியாளர் (நெ)(க(ம)ப) செங்கல்பட்டு கடித ந.க.505/2015/இவஅ-1/நாள். 05.02.2018.
2.இவ்வலுவலக நேமுக கடித ந.க.18478/2014/ஆ2 நாள்.24.02.2018
3. சார்ஆட்சியர் மதுராந்தகம் அவர்களின் கடித எண் ந.க.141/2018/சி/நாள். 21.02.2018.

காஞ்சிபுரம் மாவட்டம், மகாபலிபுரம் முதல் சென்னை துறைமுகம் (வழி) திருப்போரூர் - சிங்க பெருமாள் கோயில் - திருப்பெரும்புதூர் - திருவள்ளூர் .- தாமரைப்பாக்கம் - பெரிய பாளையம் - புதுவாயில் மற்றும் காட்டுப்பள்ளி மேம்பாடு செய்யும் பணிக்கு, காப்புக்காடு பகுதியில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட மண்ணூர் கிராமம் 0.28.எக்டேர், திருத்தேரி கிராமம் 2.56 எக்டேர் மற்றும் செங்குன்றம் 7.39 எக்டேர் ஒட்டுமொத்தம் 10.23 எக்டேர் நிலத்திற்கு பதிலாக வனத்துறைக்கு இருமடங்காக 20.46.0 எக்டேர் நிலம் மாற்று நிலமாக வழங்க மதுராந்தகம் வட்டம், நல்லாமூர் கிராம புல எண் 99ல் மொத்தமுள்ள 54.50.0 எக்டேர் நிலத்தில் ஏற்கனவே செய்யூர் அல்ட்ரா மெகா பிளான்ட் கட்டுமானம் கம்பெனி பணிக்காக வழங்கிய 20.25.0 எக்டேர் நிலம் போக மீதமுள்ள 34.25.0 எக்டேர் நிலத்தில் மேற்காணும் பணிக்கு 20.46.0 எக்டேர் நிலத்தினை மாற்றுநிலம் தேர்வு

செய்து புலத்தணிக்கை மற்றும் விசாரணை மேற்க்கொண்டு சார்ஆட்சியர் மதுராந்தகம், மற்றும் வட்டாட்சியர் மதுராந்தகம் ஆகியோரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றுள்ளது.

நிலம்

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெ.190, நல்லாமூர் கிராம கணக்குகளின்படி உத்தேச புலம் புல எண்.99/1-ல் 49.55.0 ஹெறக்டேரில் குன்று புறம்போக்கு எனப் பதிவாகியுள்ளது. இப்புலத்தின் மொத்த விஸ்தீரணம் 49.55.0 ஹெறக்டேர் ஆகும். இப்புலத்தில் 20.46.0 ஹெறக்டேர் நிலம் நிலமாற்றத்திற்கு உட்படுகிறது.

இப்புலத்தின் நான்கு எல்லைகள் விவரம்

வடக்கு : புல எண்.99/1 பகுதி (புல எண்ணுக்கு)

தெற்கு : புல எண்.99/3-ல் வனத்துறைக்கு ஒதுக்கப்பட்டது.

கிழக்கு : புல எண்.105, 107

மேற்கு : செய்யூர் வட்டம், சித்தாமூர் கிராமம் எல்லை.

பொது விளம்பரம்

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெ.190, நல்லாமூர் கிராமக் கணக்குகளின்படி உத்தேச புலம், புல எண்.99/1 குன்று புறம்போக்கில் மொத்த வீஸ்தீரணம் 49.55.0 ஹெறக்டேரில் 20.46.5 ஹெறக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்திட வேண்டி மேற்படி கிராமத்தில் 12.01.2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. நிலமாற்றம் குறித்து ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை.

உட்பிரிவு ஆவணங்கள்

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெ.190, நல்லாமூர் கிராமக் கணக்குகளின்படி உத்தேச புலம், புல எண்.99/1 குன்று புறம்போக்கில் மொத்த வீஸ்தீரணம் 49.55.0 ஹெறக்டேரில் 20.46.5 ஹெறக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு நிலமாற்றம் செய்திட வேண்டி இதனை கிராம கணக்குகளின்படி புல எண்.99/1-ல் காடு புறம்போக்கு என புதிய உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

<u>புலத்தின் தற்போதைய நிலை</u>

இப்புலத்தில் தற்போது ஆக்கிரமணங்கள் ஏதுமில்லை. பிரஸ்தாப புலத்தில் தொல்பொருள் துறைக்கு சொந்தமான நினைவு சின்னங்கள், வழிபாட்டுத்தலங்கள், மயானங்கள் மற்றும் இதர கல்வெட்டுமானங்கள் எதுவும் இல்லை. மேலும், புலமானது நாளது தேதி வரை எவ்வித ஆக்கிரமணமும் இன்றி குன்று பகுதியாகவும், சிறு மரங்கள் மற்றும் புதர்செடிகளாக உள்ளன.

<u>நில மதிப்பு</u>

பிரஸ்தாப நிலத்திற்கு நில மதிப்பு நிர்ணயம் செய்ய வேண்டி நெ.190,நல்லாமூர் கிராமத்தில் வனத்துறைக்கு நில மாற்றம் செய்ய வழிகாட்டி மதிப்பீட்டின்படி நில மாற்றம் கோரும் புலத்திற்கு நில மதிப்பு பின்வருமாறு வழிகாட்டி மதிப்பு சேகரிக்கப்பட்டுள்ளன.

Zone : CHENNAI SRO : Cheyyur Village: Nallamoor

RevnueDistName: KANCHIPURAM TalukName: Madurantakam

## Survey Numberwise Guideline values

Enter the Survey Number

108

| SURVEY NO | GUIDELINE VALUE | GUIDELINE VALUE (IN METRIC) | CLASSIFICATION |
|---|---|---|---|
| 108/1 | 469000/Acre | 1159500/Hectare | Dry Maanavari Land Type -I |
| 108/2A | 536000/Acre | 1325000/Hectare | Dry Well irrigaiton Type –I |
| 108/2B | 469000/Acre | 1159500/Hectare | Dry Maanavari Land Type -I |
| 108/2C | 469000/Acre | 1159500/Hectare | Dry Maanavari Land Type -I |
| 108/3A | 536000/Acre | 1325000/Hectare | Dry Well irrigaiton Type –I |
| 108/3B | 469000/Acre | 1159500/Hectare | Dry Maanavari Land Type -I |
| 108/4A | 27/Sqft | 290/Sqmt | Residential Class I Type - III |
| 108/4B | - | - | Govt. others |
| 108/5 | 469000/Acre | 1159500/Hectare | Dry Maanavari Land Type -I |

வழிகாட்டி மதிப்பு பதிவேட்டின்படி நிலமதிப்பு சேகரித்ததில் புல எண்.108/3பி ஒரு ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ.4,69,000/- என உள்ளது. இதன்படி நிலமாற்றம் செய்யும் நிலத்தின் நில மதிப்பு விவரம் பின்வருமாறு

| | |
|---|---|
| 1 ஏக்கர் நில மதிப்பு | - ரூ.4,69,000/- |
| 1 ஹெக்டேர் நில மதிப்பு | - ரூ.11,59,500/- |
| 1 செண்ட் மதிப்பு | - ரூ.4,690/- |
| 1 ஏர்ஸ் நில மதிப்பு | - ரூ.11,595/- |

நில மாற்றம் செய்ய உத்தேசித்துள்ள 20.46.0 ஏர்ஸ் நில மதிப்பு } = ரூ.11595 X 2046 = ரூ.2,37,23,370/-

நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் (20.46.0 ஏர்ஸ்.) நில மதிப்பு ரூ.2,37,23,370/- என வழிகாட்டி பதிவேட்டின்படி உள்ளது.

<u>பரிந்துரை</u>

நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் (20.46.0 ஏர்ஸ்) நில மதிப்பு ரூ.2,37,23,370/- ஆகிறது. வனத்துறைக்கு நில மாற்ற பிரேரணை மாவட்ட ஆட்சியர் அவர்களின் பார்வை 3-ல் காணும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தின்படி வருவாய் நிலை ஆணை எண்.23(எ)-ன் கீழ் உள்ள நிபந்தனைகளுடன் நிலமதிப்பின்றியும் மற்றும் இதர கட்டணங்களை வசூல் செய்து கொண்டும் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெ.190, நல்லாமூர் கிராமம், புல எண்.99/1 குன்று புறம்போக்கில் மொத்த வீஸ்தீரணம் 49.55.0 ஹெக்டேரில் 20.46.5 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்க நில மாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

<u>புலத்தணிக்கை :</u>

சார்ஆட்சியர் மதுராந்தகம் மற்றும் வட்டாட்சியர் மதுராந்தகம் ஆகியோர் 21.2.2018 அன்றும் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் 01.03.2018 அன்றும் புலத்தணிக்கை செய்துள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், மகாபலிபுரம் முதல் சென்னை துறைமுகம் (வழி) திருப்போரூர் - சிங்க பெருமாள் கோயில் - திருப்பெரும்புதூர் - திருவள்ளூர் .- தாமரைப்பாக்கம் - பெரிய பாளையம் - புதுவாயில் மற்றும் காட்டுப்பள்ளி மேம்பாடு செய்யும் பணிக்கு, காப்புக்காடு

5/5

பகுதியில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட மண்ணூர் கிராமம் 0.28.எக்டேர், திருத்தேரி கிராமம் 2.56 எக்டேர் மற்றும் செங்குன்றம் 7.39 எக்டேர் ஒட்டுமொத்தம் 10.23 எக்டேர் நிலத்திற்கு பதிலாக வனத்துறைக்கு இருமடங்காக 20.46.0 எக்டேர் நிலம் மாற்று நிலமாக வழங்க காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெ.190, நல்லாமூர் கிராமம், புல எண்.99/1 குன்று புறம்போக்கில் மொத்த வீஸ்தீரணம் 49.55.0 ஹெக்டேரில் 20.46.0 ஹெக்டேர் நிலத்தினை மாற்றுநிலமாக வழங்கவும், வருவாய் நிலை ஆணை எண் 23(எ)-ன் கீழ் உள்ள நிபந்தனைகளின் பேரில் மாற்று நிலம் வழங்க விசாரணை ஆவணங்கள் மற்றும் கிராம கணக்கின் நகல்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு -

1. புலத்தணிக்கை குறிப்பு
2. வினாப்படிவம்
3. கேட்புமனு
4. உட்பிரிவு ஆவணம்
5. விளம்பரம் (ம) வாக்குமூலங்கள்
6. கிராம கணக்குகளின் நகல்கள்

7.நில மதிப்பீடு செய்ய வழிகாட்டி மதிப்பீடு பிரதி

தங்கள் நம்பிக்கையுள்ள
ஒம்/-பா.பொன்னையா
மாவட்ட ஆட்சித்தலைவர்
காஞ்சிபுரம்

/உத்திரவின்படி/

[signature] 14.3.18
மாவட்ட ஆட்சியருக்காக

நகல்

1. சார்ஆட்சியர் மதுராந்தகம்.
2. மாவட்ட வன அலுவலர்
   மாவட்ட வன அலுவலகம்
   காஞ்சிபுரம்
3. கோட்ட பொறியாளர் (நெ)
   கட்டுமானம் (ம) பராமரிப்பு
   செங்கல்பட்டு.
4. வட்டாட்சியர்
   திருப்பெரும்புதூர் மற்றும் மதுராந்தகம்.